**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாள் திங்கட்கிழமை**

**O.S.No:230/2023**

**CNR No.TNTM22-000914-2023**

சண்முகம், வயது 70, த/பெ.லேட்.ரங்கசாமி,
அண்ணாநகர், குன்றுமேடு, பார்வதி அகரம்,
போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். ... வாதி

//எதிர்//

காசி, வயது 55, த/பெ.பூமகவுண்டர்,
அண்ணாநகர், குன்றுமேடு, பார்வதி அகரம்,
போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். ...பிரதிவாதி

வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுத்தரவு கோரியும், இவ்வழக்கிற்கான செலவு தொகையையும் வாதிக்கு பிரதிவாதி கொடுக்கப்பட வேண்டும் என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் –13.07.2023, 17.07.2023
தாவா பதிவு செய்யப்பட்ட நாள் – 18.07.2023

இவ்வழக்கின் தாவா மதிப்பு 1,000/– அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(c) ன் படி நீதிமன்ற கட்டணம் ரூ.30/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் வழக்கு மூலம் 22.06.1915, 25.07.1994, 20.05.2023 தேதிகளில் பார்வதி அகரம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.மகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை ஒரு தலைபட்ச உத்தரவுக்கு உட்படுத்தியும் வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதியின் தாவா அனுமதிக்கப்படுகிறது.

2. வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, உறவினர்களோ அல்லது முகவர்களோ அத்துமீறி நுழைந்து வாதியின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது.

3. வாதிக்கு பிரதிவாதி வழக்கின் செலவுத் தொகையாக ரூ.3,032/- வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**<u>Plaintiff's Cost</u>**

| | | |
|---|---|---|
| 1. Stamp for plaint | Rs. | 1,992.00 |
| 2. Stamp for Exhibit | Rs. | 30.00 |
| 3. Pleader fees | Rs. | 750.00 |
| 4. Stamp on petition | Rs. | 60.00 |
| 5. Pleading Charges | Rs. | 200.00 |
| Total | Rs. | 3,032.00 |

**<u>சொத்து விவரம்</u>**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், பார்வதி அகரம் கிராமம், பட்டா எண்.292ல் சர்வே எண்.29/2 (புதிய சர்வே எண்.29.2A) ஹெக்டேர் 0.68-ல் 0.33 ஹெக்டேர், இதற்கு ஜக்குபந்தி கிழக்கே ஓடை, ராமசந்திரன் நிலத்திற்கு மேற்கு, சகுந்தலா இடத்திற்கு தெற்கு, வடக்கே உலகநாதன் நிலம்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**Sd/-S.செந்தில் பாபு,**
**சார்பு நீதிபதி,**
**போளூர்.**